CC 20/24

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 20/2024** |
| Deposition of witness | : | **PW- 6** |
| Name | : | **குமார்** |
| Father Name | : | **செங்கோடன்** |
| Village. | : | |
| Taluk | : | |
| Age | : | **40** |

***Both accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24.06.2024.*

முதல் விசாரணை

1. நான் பெட்டிக்கடையில் வசித்து வருகிறேன். நான் பிரிண்டிங் மாஸ்டர் ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.03.2024ம் தேதி காலை 10-11 மணியளவில் கூலிபாளையம் நால் ரோட்டில் நானும் கேண்டீன் மாஸ்டர் கதிரேசனும் டீ குடிக்க சென்றோம். அங்கே ஊத்துக்குளி காவல் உதவி ஆய்வாளரும் அவருடன் வந்திருந்த சிலரும் டீ குடித்துக்கொண்டிருந்தார்கள். தற்சமயம் வெள்ளியம்பாளையம் ராஜகணபதி நகரில் உள்ள ஒரு வீட்டில் நடந்த திருட்டில் சம்பந்தப்பட்ட நபர்களை பிடித்துள்ளதாகவும் அதற்கு சாட்சியாக வரும்படி போலீசார் எங்களை அழைத்துச் சென்றார்கள். நாங்கள் எம் எஸ் நகருக்கு போலீஸ் வாகனத்தில் சென்றோம். அங்கு ஆஜர் எதிரிகள் இருவரும் இருந்தார்கள்.

S. Kumar

24.06.24

அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறி வந்தார்கள்.

2. தொடர்ச்சியாக விசாரித்த போது முதலில் கார்த்தியும் அவரைத் தொடர்ந்து புவனேஸ்வரனும் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள். தொடர்ந்து கார்த்தி ஓம் டாலர் போட்ட செயின் ஒன்று, லாவா பட்டன் மொபைல் ஒன்று ஆகியவற்றை எடுத்து எம் எஸ் நகரில் வைத்து ஆஜர் செய்தார். புவனேஸ்வரன் ஒரு செயினை அபிராமி அடகு கடையில் அடகு வைத்ததாக கூறினார். அதில் கார்த்திக்கு கொடுத்த தொகை போக மீதியை தனது வீட்டில் அவரது அம்மாவிடம் கொடுத்துள்ளதாக கூறியதன் பேரில் எங்களை அவரது அம்மாவிடம் அழைத்துச் சென்றார். அவரது தாயார் புவனேஸ்வரன் தன்னிடம் கொடுத்து வைத்திருந்த ரூபாய் 20 ஆயிரத்தை எடுத்துக் கொடுத்தார். காவல் உதவி ஆய்வாளர் அதே இடத்தில் ரஞ்சித் குமார் வர சொல்லி அந்த பொருட்களை எல்லாம் ஒப்படைத்து விட்டார்.

3. அந்த இடத்தில் வைத்து நான் மொத்தம் ஐந்து கையொப்பங்கள் செய்தேன். கைப்பற்றிய பொருட்களை அதன் உரிமையாளருக்கு திருப்பி கொடுத்ததற்கு மூன்று கையொப்பம் செய்தேன். மற்றொரு கையொப்பத்தினை ரூபாய் 20,000 ஐ போலீசார் புவனேஸ்வரனின் தாயாரிடம் இருந்து மீட்டபோது செய்தேன். நான் மொத்தம் நான்கு கையொப்பங்கள் தான் செய்தேன்.

4. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பங்கள் மேற்படி பொருட்களை காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றியபோது செய்தேன். காவல் உதவி ஆய்வாளர் எங்களை காவல் நிலையம் வர முடியுமா என்று கேட்டார் எங்களுக்கு நேரமாகிவிட்டதால்

என்பதால்தான் அவர் கேட்டதின் பேரில் இந்த நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான்.

**<u>இரண்டாம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இரண்டாம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் ஆஜரான சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. சாட்சி எனது முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

24.06

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

நேராக வீட்டுக்கு கிளம்பி சென்று விட்டோம். என்னை போலிசார் விசாரித்தார்கள்

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகார்தாரர் ரஞ்சித் குமார் எனக்கு ஓராண்டாகதெரியும். கதிரேசனை எனக்கு மூன்று ஆண்டுகளாக தெரியும். .ரஞ்சித் குமார் அவரது வீட்டில் களவு போனது பற்றி ஏற்கனவே என்னிடம் கூறியிருந்தாரா என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக என்னிடம் கூறி இருந்தார் என்றால் சரிதான். அவர் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றபோது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. நாங்கள் டீ குடித்துக் கொண்டிருந்தபோது என்னையும் கதிரேசனையும் தவிர மேலும் 20 பேர் அங்கிருந்து இருப்பார்கள் என்றால் சரிதான். அங்கு இருந்த மற்ற நபர்கள் எங்கள் மூவருக்கும் பழக்கம் இல்லாத நபர்கள் என்றால் சரிதான். ஆனால் போலீசார் அவர்கள் யாரையும் அழைக்கவில்லை என்றாலும் விசாரிக்கவும் இல்லை என்றாலும் சரிதான்.

2. போலீசார் கைப்பற்றிய பொருட்களை ரஞ்சித் குமாரிடம் அன்றைய தினம் மதியம் ஒரு மணி அளவில் ஒப்படைத்து விட்டார்கள். ரஞ்சித் குமார் அழைத்ததன் பேரில்தான் நான் கதிரேசன் போலீசார் மற்றும் எல்லாரும் சென்றோம் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன இருந்தது என்று எனக்குத் தெரியாது என்றாலும் போலீசார் கேட்டதின் பெயரில் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றாலும் சரிதான். அந்த ஆவணங்கள் யாரால் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்று எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான். ரஞ்சித் குமார் எனது நண்பர்